# திலீபன் 8ம் ஆண்டு நினைவு இன்று உணர்வுடன் அனுஷ்டிப்பு

விலை ரூபா 6-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 9 இதழ் 234
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26 - 09 - 1995

## கோட்ட ரீதியில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)
'தியாக தீபம்' லெப். கேணல் திலீபன் 8ஆம் ஆண்டு நினைவு தினம், இன்று தமிழ்ப் பிரதேசம் எங்கும் எழுச்சியுடனும், உணர்வு பூர்வமாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்று பல இடங்களில் அடையாள உண்ணாவிரதமும், நினைவுப் பொதுக் கூட்டமும் நடைபெறுகின்றது. யாழ். மாவட்டத்தின் கோட்ட மட்டத்தில், வலிகாமம் கோட்டத்தில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்றலிலும், வடமராட்சிக் கோட்டத்தில், வரணவாய் மத்தி மூத்தவிநாயகர் கோவில் முன்றலிலும், தென்மராட்சிக் கோட்டத்தில், நுணாவில் மேற்கு மணக்குளப் பிள்ளையார் கோவில்

(7ம் பக்கம் பார்க்க)

## மர்மச் சடலங்கள் விவகாரம் மேலும் 5 படையினர் கைது

(கொழும்பு)
தென்பகுதியில் வாவிகளில் மிதந்த மர்மச் சடலங்கள் சம்பந்தமாக தற்போது மேலும் ஐந்து அதிரடிப் பொலிசார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு சார்ஜன்ட் மூன்று பொலிசார் ஒரு சாரதி ஆகிய ஐவரும் தற்போது கைது செய்யப்பட்டவர்களாவர்.

(8ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் திருமலையில் கண்ணிவெடி

# இராணுவ ஜீப் வண்டி சிதறியது

## படையினருக்கு பலத்த சேதம்

(திருமலை)
திருமலை மாவட்டத்தில் சாம்பல்தீவுக்கும் நிலாவெளிக்கும் இடையில் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி படையினரின் ஜீப்வண்டி சிதறியுள்ளதுடன் அதில் பயணம் செய்த ராணுவத்திற்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று படையினர் பலரை ஏற்றிக்கொண்டு திருமலை நகரிலிருந்து சென்று கொண்டிருந்த ராணுவ வாகனங்களில் ஒன்றான ஜீப்வண்டி விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி சிதறியது.

நிலாவெளிக்கும் சாம்பல் தீவுக்கும் இடையில் இச்சம்சவம் இடம்பெற்றது.

இக் கண்ணி வெடியினால் திருமலையின் பல பகுதிகள் அதிர்ந்தன. ஜீப் வண்டிக்கு பின்னுக்கும் முன்னுக்கும்

[8ம் பக்கம் பார்க்க]

## மட்டு. நகரில் தீவிர பாகாப்பு ஏற்பாடு

(மட்டு. நகர்)
விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலை அடுத்து மட்டுநகரின் நாற்புறமும் சிறிலங்காவின் நான்கு படைகளும் செறிவாக நிறுத்தப்பட்டுள்ளது.

நகரின் தென் பகுதியில் விசேட அதிரடிப்படையும்

(2ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு தாக்குதலை மறுக்கிறது

(கொழும்பு)
வடமராட்சியில் பொதுமக்கள் மீது விமானத்தாக்குதல் எதையும் மேற்கொள்ளவில்லையென பாதுகாப்பு நடவடிக்கை செயலகம் அறிவித்துள்ளது.

பலாலியிலிருந்து வல்வெட்டித்துறை பகுதி நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொண்டதையும் அது மறுக்கிறது.

பொதுமக்கள் வாழும் பகுதியில் ஷெல், விமான தாக்குதல் மேற்கொள்ளும் நோக்கம் அரசுக்கு கிடையாது எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கே-பி

## முல்லையில் முன்னேறிய ராணுவத்தை விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர்

(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவு வட்டுவாகையில் முன்னேறிவந்த இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தி, அவர்களைப் பழைய நிலைகளுக்கு விரட்டியடித்தனர்

நேற்று முன்தினம் 8-30 மணி முதல் பிற்பகல் 4-00 மணி வரை இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி, அவர்களை முன்னேறவிடாது பின்வாங்கச் செய்தனர்.

இத்தாக்குதலின்போது இராணுவத் தரப்பில் சேதம் ஏற்பட்டது. இச்சம்பவத்தில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

(7ம் பக்கம் பார்க்க)

## இறக்ககண்டி முகாமை புலிகள் கைப்பற்றி அழிப்பு

(திருமலை)
திருமலை இறக்கக்கண்டி இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் பத்து நிமிட அதிரடித் தாக்குதல் மூலம் தாக்கி முற்றுகை கைப்பற்றி அழித்தனர்.

திருமலையிலிருந்து 14-ம் கட்டையில் உள்ள இறக்கக்கண்டி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் இரவு 1-22 மணியளவில் அதிரடித்தாக்குதல் ஒன்றை நடாத்தினர்கள். இத்தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியானதுடன் ஏனையோர் காயங்களுடன் முகாமை விட்டுதப்பியோடி விட்டனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## படகு சேவை நடைபெறுது

(யாழ்ப்பாணம்)
கிளாலி படகுச்சேவை மறு அறிவித்தல்வரை நடைபெறமாட்டாதென்று தமிழீழ அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். வி-ரி

## ஷெல், விமான தாக்குதலை நிறுத்துமாறு யாழ். அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் அரச படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களினாலும், ஷெல் தாக்குதல்களினாலும் அப்பாவிப் பொதுமக்களே நாளுக்குநாள் பலியாகிவருகின்றனர். எனவே இத்தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு கோரி, யாழ். அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, புனர்

(8ம் பக்கம் பார்க்க

★ தியாகி திலீபன் நினைவாக

நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் எமது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

— தியாகி திலீபன்

★ லிங்கம் குளிர்களி நிலையம் (கூல்பார்) ★

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### தகரப்பந்தல் விற்பனைக்கு

30 அடி புதிய மணப்பந்தல் சோடனைப் பொருட்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. வே. தியானந்தராசக்குருக்கள், நெல்லண்டை, பருத்தித்துறை. (சி-1680)

### (O/L) MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி (எ-1679)

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் IC, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனா, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற் வகைகளையும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம். அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ் 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5245)

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி மட்ரூஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ TV அன்ரனா பொருத்துதல், பழுது பார்த்தல் T. V செட் றேடியோ மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (எ-5319)

உரிமைக்கு உயிர் தந்தாய்
உத்தமனே!
உன் பெருமைக்கு இணையுண்டோ
பெருமகனே!

தியாகி லெப். கேணல்
திலீபன் நினைவு கூரும்

அண்ணா தொழிலகம்
இணுவில்

தியாகி திலீபனின்
8-வது ஆண்டு நினைவுதினம்

இலட்சிய வேட்கை கொண்டு
தியாக வேள்வியாகு
தமிழினத்தின் சுதந்திரத்திற்காகத்
தன்னை அர்ப்பணித்த
மாவீரனே உன் நாமம் என்றும் ஒலிக்கும்

மதன் நகை மாடம்
76, ராதா தெரு, [கன்னாதிட்டி]
யாழ்ப்பாணம்.

தியாக தீயில் ஆகுதியான
தியாகி லெப். கேணல் திலீபன்
நினைவுதன்னை தாங்கிநிற்கும்

★ புதிய நதியா ★
நகை மாடம்

103 சந்தோசம் சாலை,
(கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.

மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின்
தமிழீழம் உருவாவதை
யாராலும் தடுக்க முடியாது
— தியாகி திலீபன்

தியாகி திலீபன் நினைவினை
தாங்கி நிற்கும்

டனேஜ் சொகுசு
ஆசன தையல் அகம்
160, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தியாகி திலீபனின் நினைவலைகள்
★ என் போராட்ட வரலாற்றுச்
சாதனைகளையிட்டு நான் மாபெரும்
மகிழ்ச்சியும் பூரண திருப்தியும்
அடைகின்றேன.
— தியாகி திலீபன்

திரேசா அணிகலக் கடை
THERESA FURNITURE
157, லெப். கேணல் சந்தோசம் சாலை,
யாழ்ப்பாணம்.

மரணம் ஒரு தடவைதான் வரும்
அதற்காக மானத்தை விற்றுச்
சீவிக்க முடியுமா?
இறப்புக்குப் பயந்து இனத்தை
அழியவிட முடியுமா?
- தியாகி திலீபன்

★

குமார் வெதுப்பகம்
சென். செபஸ்ரியன் வீதி
பாஷையூர்

### இளைஞர் படுகாயம்

(நெல்லியடி)

வீதியைக்கடக்க முற்பட்ட இளைஞன் ஒருவர் மினிபஸ்ஸினால் மோதுண்டு தலையில் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி நாவலர் மடத்தடியில் இவ்விபத்து கடந்த புதன் காலை இடம்பெற்றது. கரணவாய் மத்தியைச் சேர்ந்த பரமசிவம் சிவநேசன் [வயது 20] என்னும் இளைஞரே விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். 160-சி

### மட்டு நகரில்

(1ம் பக்க தொடர்ச்சி)

மேற்குப்பகுதியில் விமானப்படையும் வடபகுதியில் ராணுவமும் கிழக்குப்பகுதி கடற்படையினரும் நிறுத்தப் பட்டுள்ளனர்.

நகரின் உட்புறத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பின் பலபகுதிகளிலிருந்து படையினர் வாபஸ் பெற்றதை அடுத்து அப்பகுதிகள் தற்போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன.

மட்டக்களப்பிலிருந்து வடபகுதிக்கு படையினர் நகர்த்தப்பட்டுள்ளதால் மட்டு. நகர்மீது விடுதலைப்புலிகள் எந்நேரமும் பெரும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தை அடுத்தே மட்டு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ரி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—09—26
செவ்வாய்இரவு

8-02 தியாகி லெப் கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி சி. கண்ணம்மா எழுதிய திசைகளெங்கும் தீபம் ஏற்றுவோம்
8-30 செய்திகள்
8-40 கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய தேடுதல்
8-50 மலரும் மொட்டுக்கள்

1995-09—27
புதன்காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
8-00 மணிவரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழவானொலி நிகழ்ச்சி நிரல்

1995-09—26
செவ்வாய் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 தியாக தீபம்
6-00 சிந்தனைக்கு சிலவினாடிகள்
6-02 என்தெரிவு
6-10 செய்திகள்
6-15 விளையாட்டுச் செய்திகள் அதனைத் தொடர்ந்து இவ்வாரம் இவர்

தியாகி திலீபனின் 8-வது நினைவலைகள்

எமது போராட்டப் பாதை அமைதி தழுவியதாகவோ அல்லது
இரத்தம் தோய்ந்ததாகவோ அமைய வேண்டுமெனத்
தீர்மானிக்க வேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே
— தியாகிதிலீபன்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ/து)
111, பிரதான வீதி யாழ்ப்பாணம்

### மணிவாக்கு

பலவீனத்திற்கான பரிகாரம், ஓயாது பலவீனத்தைப் பற்றி சிந்திப்பதல்ல. மாருக வலிமையை குறித்து சிந்திப்பதுதான்.

— சுவாமி விவேகானந்தர்.

# பத்திரிகை தணிக்கை முறையானது அரசின் சர்வாதிகாரத்தை காட்டுகிறது

(கொழும்பு)

இராணுவம் மற்றும் யுத்த முனைச் செய்திகளுக்கு சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் தடைவிதித்திருப்பதானது சர்வாதிகாரத்தனமானது என கொழும்பு ஆங்கில வார இதழான 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு தரப்பு கருத்து வெளியிடுகையில்: யுத்தமுனைச் செய்திகள் மற்றும் இராணுவத்தினரின்செய்திகள் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் விடுதலைப் புலிகளுக்கு எட்டுவதனுல் விடுதலைப்புலிகள் இராணுவத்தினரின் பலத்தை அறிவதற்கு உதவுவதாலேயே இத்தகைய முடிவுக்கு அரசாங்கம் வர வேண்டியிருந்ததாக தெரிவித்துள்ளது.

இராணுவ செய்திகள் தடை செய்ய தான் மேற்கொண்ட முயற்சிக்கு நியாயம் கற்பிக்க இலங்கை அரசாங்கம் முயல்வதாக விமர்சகர்கள் கருத்து வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-சி

## நமது நோக்கு

### பிக்குகளின் நிராகரிப்பு

இனப் பிரச்னேக்கு தீர்வாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் பௌத்த பிக்குகள் கண்டியில் கூடினர், ஆர்ப்பாட்ட பேரணியும் கூட்டமும் நடந்தது. சிறிலங்காவிலுள்ள நான்கு மகாநாயக்கர்களின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் ஐநூறுக்கும் அதிகமான பிக்குகள் கலந்துகொண்டனர்.

அரசின் தீர்வுத் திட்டம் நாட்டைப் பிளவுபடுத்தும் என்று பிக்குகள் தீர்மானித்து தங்கள் தங்கள் பகுதிகளுக்குச் சென்று அங்கு அவர்களை மதிக்கும் மக்களிடையே அரசின் தீர்வுத் திட்டத்துக்கு எதிராக பிரசாரங்களில் ஈடுபடுவர்.

இதேசமயம் செய்தித் தணிக்கையின் மத்தியிலும் அரசின் தீர்வுத் திட்டத்தை பிக்கு ஒருவர் எரிப்பதைக் காட்டும் படம் ஒன்றை நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளிவந்தவாரப் பத்திரிகை ஒன்று பிரசுரித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டும். இனவாதத்தை தடுப்பதும் செய்தித் தணிக்கையின் ஒரு நோக்கம் என்று கூறப்பட்டபோதும் இத்தகைய படங்கள் பிரசுரிப்பது செய்திகளை விடவும் இனப்பூசல்களைத் தூண்டிவிடும் என்பது தணிக்கையாளர்களுக்கு தெரியாது போயிற்று போலும்.

எனவே சிறிலங்காவில் உள்ள சகல மகாநாயக்கர்களின் கீழ் இயங்கும் பிக்குகள் எல்லோரும் தீர்வுத் திட்ட யோசனைகளை எதிர்ப்பது வெளிவந்துவிட்டது. அவர்களின் செல்வாக்குக்கு உட்பட்ட சிங்களவர்களும் இவ் யோசனைகளை எதிர்ப்பர். ஐக்கியதேசியக் கட்சியும் ஏனைய வகுப்புவாதக் கட்சிகளும் தமது அரசியல் செல்வாக்கை சிங்கள மக்கள் மத்தியில் உயர்த்திக்கொள்வதற்கு தீர்வு யோசனைகளை எதிர்ப்பர். ஆகவே தீர்வுத் திட்ட யோசனைகள் கிடப்புக்குள் சென்றுவிடும் என்பதில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை.

இதற்கிடையில் தமக்கையார் கொண்டு வந்த தீர்வு யோசனைகளை தம்பி அநுர வரவேற்கிருராம். தான் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு எதிரானவனல்ல; ஆனுல் பிராந்தியசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது, வெளிநாட்டு உதவியை நேரடியாக பெற்றுக்கொள்ள அனுமதிப்பது; மற்றும் அச்சபைகளின் முதலமைச்சர்களை பதவி விலக்குவதற்கான அதிகாரம் அரசுக்கு இல்லாதிருப்பது போன்ற ஏற்பாடுகளைத் தான் எதிர்ப்பதாகவும் அதுவே ஐ. தே. கவின்நிலைப்பாடாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். எனவே அநுரா பண்டாரநாயக்காவும் எதிர்க்காமல் எதிர்க்கிருர்; சொல்சிலம்பம் ஆடுகிருர்.

உலகத்தை ஏமாற்றுவதற்கும்தான் சமாதானப் பிள்ளை, துணிச்சல்காரி என்று காட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட தீர்வு யோசனைகள் அது முன் வைக்கப்பட்ட நிலையிலோ அல்லது திருத்தப்பட்ட நிலையிலோ தலை தூக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இப்போ எஞ்சியிருப்பது சந்திரிகாவுக்கும் அநுருத்த ரத்வத்தைக்கும் மிக விரும்பிய இராணுவத் தீர்வு மாத்திரமே. அதுவும் தொடங்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. வடமராட்சியில் செய்யப்பட்ட விமானக்குண்டு வீச்சுக்களும் எறிகணைத் தாக்குதலும் இதையே எடுத்துக் காட்டுகின்றது. குழந்தைகள், மாணவர்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் நரபலிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்காஞேர் படுகாயமடைந்துள்ளனர். வடமராட்சியே செறிச்சோடிக் கிடக்கிறது. இடம் பெயர்ந்தோர் நிலையும் கவலைக்கிடமாக இருக்கிறது. இந்தக் கவலையெல்லாம் சந்திரிகாவுக்கு இருக்காது. அவர் செய்வது இலைப்படுகொலை. தெரிந்து கொண்டே செய்கிருர்

இராணுவத் தீர்வை சந்திரிகா முன்னெடுக்கிருரேயானுலும் அவரால் என்ன செய்துவிட முடியும். வெற்றி கொள்ள முடியாத போரில் அவர் தோல்வியைத்தான் கட்டாயம் சந்திக்கப் போகிருர். இது அவரின் சரிந்த செல்வாக்கை மேலும் கீழே தள்ளிவிடும். ஐ. தே. கட்சியினர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெருமளவு தோல்வியை அடையவில்லை என்பதை சந்திரிகா மனதில் வைத்திருப்பது நல்லது. தமிழர்களுடன் போர் செய்து அவர்களைத் தோற்கச் செய்ய வேண்டுமென்று பேரினவாதச் சிங்களவர்கள் விரும்பினுலும் தேர்தலின்போது சந்திரிகா தமக்கு அளித்த ஏனைய வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றத் தவறிவிட்டார் என்பதை அவர்கள் மறந்துவிட மாட்டார்கள்.

## மட்டக்களப்பு ஏருவூரில் 13 தமிழ் இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏருவூரில் 13 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

ஏருவூர்ப் பிரதேசத்தை சுற்றிவளைத்த பொலிசார் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; கடைகளை அடித்து நொறுக்கி சேதமாக்கி தீமூட்டினர். கால் நடைகளைக் கொன்று அட்டகாசம் செய்தனர்.

பின்பு தேடுதல் வேட்டையில் இறங்கிய பொலிசார் மேற்படி 13 இளைஞர்களைப் பிடித்துச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ர-வி

## தணிக்கையைமீறி
# இராணுவ செய்திகளை வெளியிடும் செய்தி ஸ்தாபனங்கள் மூடப்படும்

(கொழும்பு)

பத்திரிகை செய்தி தணிக்கை தொடர்பான தகுதிவாய்ந்த அதிகாரியின அனுமதியின்றி இராணுவ செய்திகளை பிரசுரிக்கும் அல்லது ஒலி, ஒளி பரப்பும் பத்திரிகை நிறுவனங்கள் அல்லது செய்தி நிறுவனங்கள் உடனடியாக மூடப்படும் என அரசு எச்சரித்துள்ளது.

உள்ளூரிலும், வெளிநாட்டிலும் இவ்வாறு அனுமதியின்றி இராணுவச் செய்திகள் வெளியிடப்படுமானுல் அந்த நிறுவனங்களும் மூடப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது

இதற்கென அரசு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது: அந்தக் குழு சகல செய்தி நிறுவனங்களினதும் செய்திகளை பரிசீலித்து அதனை தணிக்கை செய்யும்.

இதேவேளை அரசின் இந்த தணிக்கை முறையை பத்திரிகையாளர்கள் வன்மையாக எதிர்த்துள்ளனர். இந்த முறை மூலம் ஒவ்வொருவரினதும் முக்கிய செய்திகள் மற்ற செய்தி நிறுவனங்களுக்கு தெரியும் வாய்ப்பு இருப்பதாகவும் பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர். -கி

# தமிழ்மக்கள் மீதான அட்டுழியங்களை பத்திரிகைதணிக்கையால்மறைக்கமுடியாது

(கொழும்பு)

அரசு மேற்கொண்டுள்ள தணிக்கைமுறையானது வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ அட்டூழியங்களை மறைக்கவே பயன்படுமென தமிழ் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

பத்திரிகைத் தணிக்கை முறையை கடுமையாக எதிர்த்துள்ள தமிழ் கட்சிகள் அரசு இதனை உடனடியாக நீக்க வேண்டுமெனவும் கோரியுள்ளன.

தணிக்கை முறையில் அப்பாவித் தமிழ் மக்களே பாதிக்கப்படுவர். படையினர் மேற்கொள்ளும் அட்டூழியங்கள் வடக்கு-கிழக்கிற்கு வெளியே தெரியாதவாறு செய்யும் நடவடிக்கையே இதுவென்றும் அவை கூறியுள்ளன.

'இந்தக் கட்டத்திலாவது தமிழ் எம். பி.க்கள் நாடாளுமன்றில் ஒருமித்த குரலை எழுப்ப வேண்டுமென்றும் இதனைச் செய்ய அவர்கள் தவறுவார்களானுல் அவர்கள் தமிழினத் துரோகிகள் என தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். -சி

## மேற்கு நாட்டவர் இருவர் கொழும்பில் கைது

[கொழும்பு]

மேற்கத்திய நாட்டவர் இருவரை கொழும்பு பொலிசார் கைதுசெய்து விசாரணையின் பொருட்டு தடுத்து வைத்துள்ளனர்.

இலங்கைப் பிரஜையான பிரேமானந்த சுவாமியை இந்திய அரசு கைது செய்து விசாரணைக்குட்படுத்தி வருகின்ற இவ் வேளையில் பிரேமானந்த சுவாமியின் உறவினரைச் சந்திப்பதற்காக வந்த மேற்கத்திய நாட்டவரான இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் ஒருவர் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வருகின்றது. ர-சி-ரி

## பொருட்கள் விநியோகம்

[அரியாலை]

யாழ் மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளிலும் தீவக பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளிலும் பாவனையாளர்களின் இ உ பங்கீட்டு அட்டைக்கு மா, சீனி, பால்மா சோப் வகைகள் சகாய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. 59

## மந்திகைக்கு அம்புலன்ஸ்

[நெல்லியடி]

வடமராட்சியிலும், வடமராட்சி கிழக்கிலும் தொடர்ந்து நடைபெற்றுவரும் தாக்குதலினுல் காயமடைவோர் தொகை அதிகரித்துள்ளதால் மந்திகை மருத்துவமனையின் பாவனைக்கென தற்காலிகமாக அம்புலன்ஸ் வண்டியொன்றை யாழ் பிராந்திய சுகாதாரப் பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் ஸ்ரீகாந்தா மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளார். 160 சி

## பிரசவ விடுதி இயங்குகின்றது

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்திய சாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு ஆனைக்கோட்டை சந்திக்கு சமீபமாகவுள்ள கட்டிடம் ஒன்றில் இயங்கி வருகின்ற போதிலும் சங்கானையிலும் வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவு தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இங்குள்ள ஆண் பெண் வார்ட்டுகள் இயங்காத போதிலும் பிரசவ விடுதியில் கர்ப்பிணி தாய்மார்கள் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். 72-சி

## இன்னும் மனக்குருடு இங்கு தடுமாறுதடி...!

சின்னப் புலிக்குருளை
செத்துதிர்ந்து போகையிலே
கண்ணைப் பிறர்க்களித்தான்
ஞானத் தங்கமே - இந்த
மண்ணை யளப்பதற்கு
ஞானத் தங்கமே
இன்னும் மனக்குருடு
இங்குதடு மாறுதடி
எண்ணந் தெளிவுபெற
ஞானத் தங்கமே - இங்கு
எத்தனைபேர் சாவதடி
ஞானத் தங்கமே.

பூப்பொலிந்த தேரிழுத்து
நால்வர் விரைவாய் நடக்க
பாப்பொழிவார் மேளஇசை
ஞானத் தங்கமே - தொடரப்
போய்ப் படியத் தீயெரியும்
ஞானத்தங்கமே,
பூவுமில்லைத் தேருமில்லை
பின்தொடரக் காலுமில்லை
ஊர்த்தெருவில் நாறுகிருர்
ஞானத் தங்கமே - விழி
உள்ளவரும் காணவில்லை
ஞானத் தங்கமே.

—மதவடிச் சித்தர்

# தியாகி திலீபனின் 8-ம் ஆண்டு நி


தியாகி லெப்.கேணல் திலீபனுக்கு
எமது அஞ்சலி

**C. C. C.**

**City Clinical Consultation**

கண் மற்றும் நோய்களுக்கான சிறந்த
வைத்திய நிபுணர் ஆலோசனை வழங்கும்
தனித்துவமான நிறுவனம்.

C. C. C. கிளினிக்

இல. 37, விக்டோரியா வீதி,
சுபாஸ் இல்லம்,
யாழ்ப்பாணம்.


## "தமிழுலகம் உச்சரிக்கும் உன்னத பெய

தமிழுலகம் உச்சரிக்கும் உன்னத பெயராக 'திலீபன்' வரலாகி எட்டு வருடங்கள் கடந்து விட்டபோதும் தியாகி திலீபனின் போராட்ட சிந்தனைகள், தமிழீழ லட்சியம் யாவும் எம்மோடு பின்னிப் பிணைந்துள்ளன.

தமிழீழ வரலாற்றில் திலீபன் ஒரு புது அத்தியாயம். அகிம்சை போராட்டத்திற்கு திலீபன் ஒரு முன்னுரை அர்ப்பணிப்பின் மறுபெயர் திலீபன்.

இந்திய வல்லாதிக்கம் எமது கழுத்துக்களை நெருக்கிப்பிடித்த போது கொதித்தெழுந்த திலீபன் அதற்கு எதிராகப் போராடினான், வாதாடினான். இறுதியில் இந்தியச் சதியினாலே இவ்வுலகை நீத்தான்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் எமது மண்ணில் குவிக்கப்பட்ட இந்தியப் படைகள் நீதி தவறிய போது எழுந்து நின்றான் திலீபன்.

தமிழீழ மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை தானே ஏற்றுக்கொள்கிறேன் என வாக்குறுதியளித்து தமிழ் மக்களின் நலனுக்காக என இலங்கை அரசுடன் ஒப்பந்தத்தைச் செய்த இந்திய அரசு ஒப்பந்தப்படி தமிழ் மக்களின் நலனைப் பேணத்தவறியது

அதுமட்டுமன்றி இனத்துரோகிகளை துணையாகக் கொண்டு எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு தனது பிராந்திய

விடுதலைப் புலிகள் வாழ வேண்டுமென்றோ ஆள வேண்டுமென்றோ ஆசை கொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

தியாகி திலீபன்

### செந்தாளன்

ஆதிக்கவெறிக்குபணியாத தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கவும், தமிழீழமக்களையும் மிகக்கொடூரங்களுக்குள்ளாக்கி கொண்டிருந்த நேரத்தில்இந்திய அரசின் துரோகத்தனத்தை உலகுக்கு அம்பலப்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைபுலிகள் இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளரான திலீபன் இந்தியாவின் அநீதிக்கு எதிராக அறவழியில் போர் தொடுத்தான்

இந்திய அரசிடம் 5-கோரிக்கைகளை முன்வைத்து 15- 09- 1987 ல் நல்லூர் தேரோடும் வீதியிலே நீராகாரம் எதுவுமின்றி சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தான்.

★ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுப்பு முகாம்களில் வாழும் சகல தமிழ் மக்களும் விடுவிக்கப்பட வேண்டும்.

★ புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

★ இடைக்கால அரசு நிறுவப்படும் வரை சகல புனர்வாழ்வு வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.



★ வடக்கு
ணங்களில்
பொலிஸ் நி
கப்படுதல் உ
தப்படல் வே

★ இந்திய
யின் மேற்பா
காவல் ப
ஆயுதங்கள்
தமிழ் கிராம
கள் ஆகிய
ணுவ, பொ
மூடப்பட
மிகக்குறைந்
கோரிக்கைக
தான்.

உ

அகிம்

ஞ

மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின்
தமிழீழம் உருவாவதை யாராலும்
தடுக்க முடியாது.

– தியாகி திலீபன்


# பகவான் மருந்தகம்

**BAGAVAAN MEDICAL**

221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


### தியாகச் சுடரே திலீபா!

துப்பாக்கி தூக்கிப் போராடத்
தூர நின்றவன் அல்லன் நீ
அதிலும் நீ ஒரு புலி
நீ பெற்ற அவ்வுழுப்புண்கள்
அதைப் பறைசாற்றும்
ஆயினும்—
ஆயுதப் போரில் மட்டுமல்ல
அறப்போரிலுங்கூட
நாம் எவர்க்கும் இரண்டாமவரல்லர்
இதை உலகிற்கு உணர்த்தினாய்
உயர்ந்து நின்றாய்

அறப்போராட்டமா?
அதன் பிறப்பிடமே தானென
இறுமாந்திருந்தாள் பாரதத்தாய்
ஆனால்—
நீ மரணித்த நாள்
அவள் தலை குனிந்த நாள்!
குனிந்த அவள் தலை
இன்று வரை
நிமிரவே யில்லை!
வானுலகில் கவிபாரதி
ஆனந்தக் கூத்தாடி
நெஞ்சாரத் தழுவியிருப்பான் உன்னை

அறத்திலும் சரித்திரம் படைத்துவிட்ட
தியாகச் சுடரே திலீபா!
உலகில்—
அறமும் வீரமும் இருக்கும் வரை
தமிழும் தமிழனும் இருக்கும்வரை
உன் நாமமும் என்றென்றும் வாழும்!

கருணைச் சுதன்


# தியாகி திலீபனின்
## 8வது ஆண்டு நினைவுதினம்

எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கொரு நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல் தான் நாளை எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும், வருத்தப்படும்.

—தியாகி திலீபன்

# வணிக ஊழியர் கழகம்

**யாழ்ப்பாணம்.**

237, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.



# தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக

மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும், அது நிச்சயமாகத்
தமிழீழத்தை எனது இறப்பின் மூலம் பெற்றுத்தரும்

— தியாகி திலீபன்

நான் என்னுயிரிலும் மேலாக நேசிக்கும் மக்களே
உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன்
நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும்.
இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்'

— தியாகி திலீபன்



# சேரன் பல்பொருள் வாணிபம்

# னவுச் சிறப்பிதழ் (26-09-1995)

## தியாகி திலீபன்"



த மாகா
லங்காவின்
ர் திறக்
பாக நிறுத்

திப் படை
ல் ஊர்
டமிருந்து
ளயப்பட்டு
பாடசாலே
ள இரா
லயங்கள்
என
ஐந்து
ன் வைத்

ஆனல் இந்திய அரசோ பாராமுகமாக இருந்தது. நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டேயிருந்தது. திலீபனின் உடல் நிலேயும் நாளுக்கு நாள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்தியாவோ திலீபன் உண்ணு விரதம் தொடர்பாக எவ்வித அக்கறையுமின்றி இருந்தது திலீபன் தான் வைத்த கோரிக்கைகளே வென்றெடுப்பதற்காக 12 நாட்கள் தன் வயிற்றிலே பசி வளர்த்தான். ஒரு சிறு துளி நீர் கூட அருந்தாமல் பசித்திருந்தான் விழித்திருந்தான். ஆனல் பாரத அரசோ கைவிட்டு விட்டது. 12ம் நாள் 1987 செப் 26ம் திகதி மு. ப 10 மணிக்கு எங்கள் பிள்ளே எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்தது. ஆம் திலீபன் தியாக மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

எட்டு வருடங்களுக்கு முன் கோட்டையிலே புலிக்கொடி ஏறவேண்டும் என்று விரும்பிய திலீபனின் கனவை விடுதலேப் புலிகள் நனவாக்கி விட்டார்கள்.

இணக்க சபைகள் மூலம் அன்று நீதிநிர்வாகத்தை பரிபாலித்த திலீபன் இன்று தமிழீழ நிதி நிர்வாக சேவை, தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழ காவல்துறை, தமிழீழ சுகாதார சேவை, போன்றவற்றின் செயறபாடுகளே வானிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பான்.

651- வது மாவீரனைச் சென்ற திலீபனின் பின்னல் ஏழாயிரம் புலிவீரர்கள் வரையில் தம்மை ஆகுதி ஆக்கி விட்டார்கள். போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. விடுதலேயை நோக்கி விடுதலேக்கு போராடிய எந்த இனமும் தோற்றதாக வரலாறு இல்லே எனவே என்றே ஒரு நாள் எமது தேசமும் விடுவிக்கப்படும். அப்போது திலீபன் போன்ற தியாகிகளின் கனவும் நனவாகும்.

## விடியலேத் தேட உருகிய மெழுகுவர்த்தி

வேள்வித்தீயில் வேங்கை ஒன்று விதிசமைத்தது
வேள்விகேக்கா இந்தியமும் கேடுசெய்தது
பசியோடு பாரினிலே புலிகிடந்தது
புசிக்காமல் வேங்கை அவன் வயிறெறிந்தது

ஐந்து அம்ச கோரிக்கையை அண்ணன் கேட்டான்
பஞ்சுஉள்ளம் கொண்டவனே பகை ஏப்பம்விட்டான்
சத்தியத்தின் பெயரில் புலி வேள்விசெய்தது
இந்தியத்தின் படைகள் இதை கேலிசெய்தது
பன்னிரண்டு நாட்களின் பின் வேர்பிரிந்தது
கண்ணிருண்டு பாரதமும் கதி இழந்தது
வல்லரசு வந்து இங்கு வதைவதைத்தது
கள்ளரசு இந்தியத்தின் கதைமுடிந்தது

காந்திதேசம் என்றவரின் கதைமுடிந்தது
எங்கள்தேசம் என்பதனல் இது நடந்தது
சத்தியத்தின் வேங்கை ஒன்று விந்தை செய்தது
இந்தியத்தின் மந்தையினே ஓடச் செய்தது

சரவணேயூர் தனேந்திரன்

## தியாக தீபம்!

தீபம் எரிகின்றது தியாக
தீபம் எரிகின்றது
அகிம்சை வேந்தன்
தியாகி திலீபனின்
முகமதில் தெரிகின்றது
தீபம் எரிகின்றது தியாக
தீபம் எரிகின்றது

அகிம்சை பிறந்தது காந்திய மண்ணில்
அதனே மறந்தது இந்திய அரசு
ஐந்து கோரிக்கை முன் வைத்தான் திலீபன்
அதனே நிறைவேற்ருதிருந்தது சதியே
தீபம் எரிகின்றது தியாக
தீபம் எரிகின்றது

காந்தி பிறந்த பாரத நாட்டில்
அகிம்சை என்பது புரியாத தொன்று
குண்டு துளேக்காத காரில் பவனி செல்லும்
இந்திய அரசினர்க்கு இது எங்கு புரியும்
தீபம் எரிகின்றது தியாக
தீபம் எரிகின்றது.

பன்னிரு நாட்கள் பட்டினியிருந்தான்
பாதகர் முடிவை எதிர் நோக்கிக் கிடந்தான்
எந்த முடிவும் நிறை வேறவில்லே
தன்னுயிர் நீத்தான் வீரன் திலீபன்
தீபம் எரிகின்றது தியாக
தீபம் எரிகின்றது.

— நா. சுகுமார்.

## யார் மறத்தல் கூடும்?

ரிலும் மக்கள் மீதும்
றிடாப் பாசம் கொண்டே
வும் மறந்து நீயும்
ன்னேயே உருக்கி இங்கோர்
மயில் உயர்ந்த வேள்வி
லகின் கண் கலங்கச் செய்தாய்!
ரிய! உந்தன் ஈகத்
றனே யார் மறக்கல் கூடும்

சமர்க் களத்தி லாடும்
வகை நீ, இங்கு வந்த
இந்திக் கூட்டம்
களே ஏய்த்தல் கண்டு
னில் துயரம் மேவ
ளிருள் கலேக்க வென்று
டர் பரப்பி நின்ருய்
லீபனே! அறத்தின் மைந்தா!

மானம் காக்கத்
ன்னேயே தந்தாய் எங்கள்
மே அன்பின் ஊற்றே
ருந்தவத் தலேவன் தம்பி!
ளம் நிறைந்தாய் தமிழ்
ழத்தின் ஒளியு மானய்
மாய் நிமிர்ந்தாய் எங்கள்
தயத்தில் வாழ்வாய் என்றும்;

— நிலா தமிழின் தாசன்.


ஃ நான் நேசித்த தமிழீழ மண்ணில்
வாழ்கின்ற அனேவரும்
எமது உரிமையை மீட்பதற்காக
பெரும் புரட்சிக்கு தயாராக வேண்டும்
- தியாகி திலீபன்

★ திருமாட்டி ★
பிடவைக் கடல்
122, மின்சாரநிலேய வீதி [மேல்மாடி]
யாழ்ப்பாணம்.

தியாகத்தின் பெருமையை உணரவைத்த
திலீபனது மகிமையை அறியவேண்டும்.
தியாகி
லெப்.கேணல் திலீபனுக்கு
எமது அஞ்சலி

கல்யாணி குளிரகம்
(கல்யாணி கிறீம் ஹவுஸ்)
73, சந்தோசம் தெரு,
[கஸ்தூரியார் வீதி]
யாழ்ப்பாணம்.

மரணம் ஒரு தடவைதான் வரும்
அதற்காக மானத்தை விற்றுச்
சீவிக்க முடியுமா?
இறப்புக்கு பயந்து இனத்தை
அழியவிட முடியுமா?
- தியாகி திலீபன்

★ உள்ளூர் உற்பத்தி சவர்க்காரத்தைப்
பாவித்துப் பெருமை கொள்ளுங்கள்
மில்க்வைற்

ார் தொடுத்து தன் பொன்னுன
ன எம் மண்ணுக்கு ஈந்த
யாகி திலீபனின் நினைவு
மை விட்டு நீங்காது.
ம் ஆடையகம்
(அஜந்தாஸ்)
சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

னம்
ற்பனைக்கூடம்
, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.


## தியாகி திலீபனின் 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

''நான் மரணத்தை மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் தான் தழுவிக்கொள்கிறேன். என் தலேவரின் தலேமையில் அனேத்து மக்களும் கிளர்ந்தெழுவார்கள் என்பதை உறுதியாக நம்புகிறேன். இந்த மாபெரும் மக்கள் புரட்சி என்றே ஒருநாள் எம் இலட்சியத்தை நிறைவேற்றியேதீரும். எம் மக்கள்மீது கொண்ட அசையாத நம்பிக்கையின் பேரில் அவர்கள்மீது கொண்ட தளராத பாசத்தின் பேரில் அவர்களின் விடிவிற்காக நான் 651வது விடுதலேப்புலியாக என் தோழர்களே நோக்கி மெதுவாக முன் போய்க்கொண்டிருக்கின்றேன்'' - தியாகி திலீபன்



யாழ். வணிகர் கழகம்

# உழைப்பாளிகள் வருகைக்காக காத்திருக்கும் வளப்பும் செழிப்பும் மிக்க வன்னிப் பெருநிலம்!

உழைப்புத்திறன் இருந்தும் அதைச்செயற்படுத்தி எமது ஆற்றலைப் பிரயோகித்து வளம் பெருக்கிப் பொருள் ஈட்ட இயலாதபடி அரச படைகள் குடாநாட்டின் பயன்தரு விளைநிலங்களில் கண்மூடித்தனமான அராஜகம் நடாத்திக் கொண்டிருக்கின்றன.

இதுகண்டு அஞ்சி அவ்விடத்து விவசாயிகளும் மீன்வளக் கடற்பரப்புக்களை விட்டு அனுபவமிக்க மீனவர்களும் இடம்பெயர்ந்து வேறிடம் சென்று கொண்டிருக்கின்றனர்.

முழுக்குடும்பங்களாக இடம்பெயர்ந்தவர்களாகி வருமானம், வசதிகள் எதுவுமற்ற நிலையில் மனம் இடிந்து போய் நிவாரணங்களை மட்டுமே நம்பி இருக்கும் துயரநிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு விட்டனர்.

காலையும், மாலையும் தசைநார்கள் இறுகி முறுகக் களைப்பும், சோர்வும் தெரியாமல் வியர்வை வழிந்தோடக் கடின உழைப்பு என்ற ஒன்றையே மூலதனமாக இட்ட நிலங்களையும், கடற்பரப்புக்களையும் விட்டுச் செல்கின்ற விவசாய மீனவக் குடும்பங்களின் நெஞ்சங்கள் துயரச் சுமையால் கனத்துக் கனலுவதை உணராதோர் எவருமிலர்

இவ்வாறு இடம்பெயர்ந்து இக்குடும்பங்கள் குடாநாட்டின் வேறு பகுதிகளில் நண்பர்கள் உறவினர் வீடுகளில் அல்லது வேறு இடங்களில் தங்கி நாட்களைக் கழிக்கும் நிலை நாம் அறிந்ததே.

ஆயினும் இவர்களிலும் சில குடும்பங்கள் மனதைத் தளரவிடாது தாம் எடுத்த முடிவால் துணைநிலைகளைந்து மகிழ்ச்சிகரமான நல்வாழ்க்கை அமைத்துக் கொள்ளும் நிலைக்கு முன்னேறி விட்டனர்.

ஆம் அவர்கள் எடுத்தமுடிவு தாம் இனிமேல் இருக்க வேண்டிய இடம்: தமது உழைப்புத் திறமை ஆற்றல் யாவும் பிரயோகமாகக் கூடிய நிலம் வன்னிப் பெருநிலமாகத்தான் இருக்க வேண்டும் என அவர்கள் எடுத்த உறுதிமிக்க தீர்க்கமான அந்த நல்ல முடிவே இன்று செழிப்புமிக்க நல்வாழ்வு ஒன்றை அவர்களுக்கு அமைத்துக் கொடுத்திருக்கின்றது

இவர்களுக்கு மேலும் மகிழ்வூட்டக்கூடிய சேதி ஒன்றும் உண்டு. வன்னிப் பெருநிலத்தின் முக்கிய நகரங்களான கிளிநொச்சி, மாங்குளம் என்பன சகல அடிப்படை வசதிகளுடனும் மீள்கட்டமைப்புச் செய்யப்படவுள்ளன. இதன் பின் அவ்விரு நகரங்களும் வன்னியின் மாதிரிப் பெருநகரங்களாகத் திகழவிருக்கின்றன.

### தீபன்

பாடசாலை, வைத்தியசாலை. பூங்கா போன்ற வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள இவ்விரு நகரங்களில் கிளிநொச்சியே முதலில் மீள்நிர்மாணம் செய்யப்படவிருக்கின்றது. குடி தண்ணீர், மற்றும் சுகாதார வசதிகள் முக்கியத்துவம் பெற்றநிலையில் பேணப்படவிருக்கின்றன. சூழல் மாசடைவு கண்டிப்பாக கட்டுப்படுத்தப்படும்.

இதுமட்டுமின்றி வன்னி மண்ணின் செழுமைக்கு ஆதாரமான நீர்ப்பாசனத்தை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் அவ்விடத்து பாரியகுளங்கள், நடுத்தரக்குளங்கள். சிறுகுளங்கள் என்பன மீள் நிருமாண திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

மேலும் வன்னிப் பரப்பில் காணப்படும் சகல ஆற்றுப் படுக்கைத்தேக்கங்களிலும் நீர்வளம் பேணப்படும் பெருமுயற்சி ஒன்றும் தொடங்கப் பட்டிருக்கின்றது. உதாரணமாக மேலதிக நீர்கொண்ட தேக்கத்திலிருந்தும் நீர் வீணாக விரயமாவது தடுக்கப்பட்டு நீர் மட்டம் குறைந்த ஆற்றுப்படுக்கைக்கு அந்நீர் திசை திருப்பப்படுகின்றது. இத்திசை திருப்பலின் போது இந்த நோக்கத்துக்காக புதிதாக கால்வாய் ஒன்று வெட்டப்படுகிறது. இவ்வாறான பாரிய திட்டங்கள் அங்கு வந்து உழைத்து முன்னேறும் குடும்பங்களுக்காக நிறைவேற்றப்படவுள்ளன.

புதிதாக குடியேறுபவர்களது விவசாயத்துக்கான நீர்த் தேவை முன்னமே கணிப்பிடப்பட்டு அதற்கேற்றவாறு பாசனவசதிகள் அமைக்கப்படுகின்றன, ஆகையால் நீர்ப் பாசனக்குறைபாடு என்று முறையிட வாய்ப்பே இல்லாதபடி நீர்வளம் பங்கிடப்படவுள்ளது.

அண்மையில் வன்னிப்பரப்பின் செழுமை மற்றும் நீர்வளம் போன்ற வற்றைப்பார்வையிடும் நோக்கில் பயணம் ஒன்றை மேற்கொள்ள வாய்ப்புக்கிட்டியது. இதன்போது மேற்சொன்ன விடயங்கள் பற்றியஉண்மைகளை நேரில் கண்டறியும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

- தொடரும்

## வையமே வியக்குது

வாழ்வே தமிழ்மண் ஆக வாழ்ந்தவன்
வந்த பகைதனை வெல்லத் துடித்தவன்
தாழ்ந்து போகவோ தமிழன் அடிமையோ
தாங்கி ஆயுதம் போர்க்களம் சென்றவன்
சூழ்ந்து பாரதம் செய்த சூழ்ச்சியை
துணிந்து நோன்பினுல் சாக டித்தவன்
வாழ்ந்து காட்டிய உயர்ந்த லட்சியம்
வையகம் கண்டுமே வியந்து போற்றுது

வ. யோகானந்தசிவம்

## மண் பறிபோனுல்...

ஊர் தாக்க ஓடிவந்த உலுத்தர் தமை எதிர்த்து
போரி நோக்கி நின்று புற முதுகு காட்டாமல்
மார் நோக்கி வந்த வேல் மார்பினிலே பாயவிட்டு
பார் காத்த வீரர் பரம்பரையில் வந்தவர் நாம்!

நாவீரர் உண்டிங்கு நல்ல தமிழ் யாத்தளிக்க
பாவீரரும் உண்டு பாடிப் படிப்பதற்கு
மாவீரர் வேணுமிந்த மண்ணைப் புரப்பதற்கு
சேர்வீரே இந்த மண்ணின் சேவகரே ஒன்ருக!

உண்டே அவர்பாடு ஊரிலே நம்பாடு
என்றே இருக்காமல் எண்ணித் துணிந்தே நம்
பண்டே நிலம்காக்க பாடுபட்ட மாவீரன்
பண்டார வன்னியனின் பாண்மை உணர்வீரே!

ஆண்டான் இராவணனே அன்றி இரா மனுமோ
மாண்டால் அவர்பாடு மண்ணிலே என்றிருந்து
பூண்டோ டழியாமல் போர் வீரர் சேவைசெய்ய
ஈண்டே எழுவீரே எதிர்கொள்ள மாற்ருனை!

மாவீரனுக்கான மார்தட்டி போர் மூட்டி
சேர்வீரே கூட்டாக சேர்ந்து பகைவெல்ல
வாய் வீரராய் நின்று வம்பு தும்பு பேசாமல்
பாய்வீரே போர்க்களத்தில் பகைவர்களை எதிர்க்க!

பண்பே அறியாத பாதகர் ஆட்சியிலே
என்ன பொருள் போனுலும் இருந்துழைத்துப்
பெற்றிடலாம்
மண் பறிபோனுல் நாம் வாழ்வது எங்கிருந்து
கண்கள் பறிபோனுல் பின் காண் போமா காட்சிகளை

— செஞ்சொற்கவிஞர்

## கோட்டைதனில்... கொடியேற்றி...

நாலிரண்டு ஆண்டுமுன்னே,
நாங்கள் மேடையேற்றி விட்ட
நாயகனே திலீப னுனை
நாளுமெண்ணி ஏங்குகின்ருேம்.
ஆறிரண்டு நாளதுவாய்
ஆகார மேது மின்றி
பார்த்தீபனே நீயிருந்தாய்
பாரில் உயர் வடைந்துவிட்டாய்.
நீயிருக்க நாமமைத்த
நீண்டதந்த மேடையதில்
திலீப மெம்மை பிரியுமென்று
தமிழர் நாங்கள் நினைத்ததில்லை
பாரதத்து தூதவன் தான்
பார்த்தீப னுயிர் குடிக்கும்
(இ)யம தர்ம தூதனென்று
அன்று நாங்க ளறியவில்லை
தலைமகனை பறிகொடுத்தே
தமிழீழம் விழித்தெழுந்து
பாரதப்படை விரட்டி
பாரில் உயர்வடைந்த தறி!
கோட்டையது வென்றிடலே
கொள்கை வீர மென்றுரைத்தாய்
அந்த கோட்டைதனில் கொடியேற்றி
ஆண்டு ஐந்து ஆன தறி!
கோட்டையது வென்றுவிட்டோம்
கொள்கையிலே உயர்ந்துவிட்டோம்
ஈழமது வென்றிடவே—திலீபா
நின் நினைவில் உறுதி செய்வோம்

நாக. தயாகரன்

## நின்கனவு நனவாகும் காலமும் கனியுதைய்யா

காற்செருப்பா யொருகாலம் நாமிருந்தோ மவ்வேளை
சிங்களத்துக் காடையர்கள் அடித்தெம்மை
வதைத்திட்டார்
ஆற்ருெணுத் துன்பங்கள் இழைத்தொன்ரு
யெரித்திட்டார்
அடங்கியோர் கோழைகளாய் அடிவருடி
வாழ்ந்திட்டார்
மாற்றுரைக்க யாருமின்றி யேங்கியபோ தெம்தலைவன்
மாற்ருரின் திமிரடக்க முடிவெடுக்க நீயிணைந்து
சாற்றுமிளஞ் சான்ருேனுய் எழுச்சியுட னறிவுரைத்து
சாவிற்கு மஞ்சாது புரட்சித்தீ மூட்டிவிட்டாய்
பாரதமேல் வந்ததிங்கு பால்வார்த்து வளர்த்திடவா!
பலியெடுத்துக் குடியழிக்க வந்தகதை நீயறிந்து
வீரமுட னுரைநிகழ்த்திக் களமாட வாட்திரட்டி
இலட்சியத்தை வென்றெடுக்கும் கொள்கையினிற்
கண்ணுறுத்தி
தேரசையும் வீதியிலே தேசத்தின் நலன்காக்க
புலனடக்கி வாயொறுத்து மெய்யுருகத்
தவத்தினுய்
மாரடித்துத் தாய்குலத்தார் கதறியழ விழிமூடி
வரலாறு படைத்திட்ட திலீபனையா
வணங்குகின்ருேம்
தமிழர்களின் தாயகத்தைப் பறித்தெடுக்கத் துடிதுடிக்கும்
சிங்களத்துத் தலைவர்களும் கதிகலங்கித் தடுமாற
அமைதியுடன் முடிவெடுத்து நீ யாத்த வேள்வியினுல்
மூண்டெழுந்த புரட்சித்தீ பகையினையே
பொசுக்குதைய்யா
இமைப்பொழுதில் வானத்து விமானங்கள் சிதறிடவே
இரைந்தொலிக்கும் சாகரத்தில் டோருக்க—
ளெரிந்தழிய
அமைகின்ற தமிழீழம் இளங்கதிரா யெழும்புதைய்யா
நின்கனவு நனவாகும் காலமுங் கனியுதைய்யா

"மாரீசன்"


# தியாகி திலீபனின் 8-வது ஆண்டு நினைவு தினம்

கல்வி, செல்வம் புகழ் அனைத்தையும் துறந்து
அஹிம்சை வழியில் வீரகாவியம் படைத்தாயோ எம் தலைவா திலீபா!



# மலரும் மலர்கள்

(வீடியோ புகைப்பட சேவை)

BLOSSOMS

82, சிவப்பிரகாசம் வீதி -:- யாழ்ப்பாணம்

# செய்தித் தணிக்கையால் இராணுவ வெற்றிகளைப் பெற முடியுமா?

கடந்த சில நாட்களாக தென்பகுதியில் செய்தித் தணிக்கை அமுல் செய்யப்பட்டு வருகின்ற போதிலும் இராணுவம் மீது வடபகுதயில் நடாத்தப்பட்டு வரும் தாக்குதல் செய்திகள் எப்படியோ சர்வதேச தொடர்பு சாதனங்களுக்கு கிடைத்து வருகின்றது.

பி. பி. ஸி வொய்ஸ் ஒவ் அமெரிக்கா றேடியோ ஒஸ்ரேலியா போன்ற செய்தி நிறுவனங்கள் உடனுக்குடன் இச்செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

நாகர் கோவில் மகாவித்தியாலய மாணவர்கள் மீது புக்காரா விமானம் நடாத்திய தாக்குதல் தொடர்பான செய்திகளை அரசு தரப்பினர் வெளியிட மறுத்து வருகின்றனர்.

இப்பாடசாலையில் மாணவர்கள் புக்காரா தாக்குதலில் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன என்று இலங்கை அரசின் தணிக்கை அதிகாரியிடம் பி. பி. ஸி சிங்கள செய்தியாளர் லண்டனிலிருந்து தொலைபேசி மூலம் கேட்ட போது அதுபற்றி தனக்குத் எதுவுமே தெரியாது என்று கூறிவிட்டார்.

இவ்வாறு பல உள்நாட்டு வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்கள் இத்தாக்குதல் தொடர்பாக கேட்ட பொழுதும் அரசு தரப்பில் எவ்வித பதில்களும் அளிக்கப்படவில்லையாம்.

இதேவேளை காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் டோரு படகு தகர்க்கப்பட்டதாக பி. பி. ஸி செய்தியில் வெளியான தகவல் பொய்யானது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டோரு தகர்ப்பு தொடர்பாக கொழும்பு பத்திரிகையான ஐலண்ட் செய்தி வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தென்பகுதியில் செய்தித் தணிக்கையை அமுல் செய்துள்ள அரசு அதன் மூலம் இராணுவ தோல்விகளை மூடி மறைக்கலாம் என எதிர்பார்க்கிறது. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் செய்திகள் அனைத்தும் இன்று சர்வதேச தொடர்பு சாதனங்களுக்கு உடனுக்குடன் கிடைத்து வருவதால் அரசு எவ்வளவுதான் இருட்டடிப்பு செய்தாலும் உண்மை நிலையை ஒருபோதும் மறைக்க முடியாது.

டோரு தகர்ப்பு மற்றும் நாகர் கோவிலில் பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டது வடமராட்சி மீதான தொடர் ஷெல் தாக்குதல்கள் தொடர்பாக பி. பி. ஸி உட்பட சகல வெளிநாட்டுவானொலிகளும் வழமை போன்று

**துரை**

ஒலிபரப்பியது குறிப்பிடத்தக்கது எனினும் இதனை இராணுவம் மறுத்துமுள்ளது.

செய்தி தணிக்கை மூலம் அரசு சாதிக்க விரும்புவது தான் என்ன? இராணுவ ரீதியில் தமிழ் மக்களை வெற்றி கொள்ள முடியும் என்ற நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசு செய்தி தணிக்கை மூலம் இராணுவ தோல்விகளை மூடிமறைக்கலாம் என்று மனப்பால் குடிக்கிறது.

இராணுவ தோல்விகளை அல்லது தமிழ் மக்களின் மீதான தாக்குதலை ஒரு போதும் அரசு மூடிமறைக்க முடியாது என்பதனை அண்மையில் நடைபெற்ற இரு சம்பவங்களும் விளக்குகின்றன.

மேலும் தமிழர் பிரச்னை இன்று சர்வதேசரீதியில் பிரசித்தமாகி விட்டது

இந்தநிலையிலும் அரசு தமிழ் மக்கள் மீது பெரும் தாக்குதலை நடத்தி ஒரு அழிவை ஏற்படுத்தி அந்த செய்திகளை இருட்டடிப்பு செய்துவிடலாம் என்ற நோக்கிலே செயற்பட்டு வருகிறது. இது ஒரு போதும் சாத்தியப்படாதது என்பதனை கடந்தகால வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன;

பத்திரிகைச் சுதந்திரம் பற்றி தெளிவானபார்வையை ஆரம்பத்தில் வெளியிட்டிருந்த சந்திரிகா அம்மையார் இன்று அதற்கு மாறாக செயற்பட்டு வருகிறார்'

பத்திரிகை நிறுவனங்கள் மீது முற்றுகை. பத்திரிகையாளர் தாக்குதல் என்பன உட்பட பலசம்பவங்கள் தெற்கில் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில்தான் செய்தி தணிக்கையும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அரசின் செய்தித் தணிக்கையானது கொழும்பில் மட்டும் கடைப்பிடிக்கப்படும். ஆனால் தமிழீழ செய்திகளை அரசினால் தணிக்கை செய்ய முடியாது. இதனால்எம்மை இச் செய்தித் தணிக்கை பாதிக்கமுடியாது. -நி

## முல்லையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இராணுவ முன்னேற்ற முறியடிப்புத் தாக்குதலில் கப்டன் அருட்செல்வன் அல்லது டிக்ஷிற் (நவரத்தினம் கணேசன், புத்தூர், நவக்கிரி) லெப். கோகிலன் (தம்பிராசாசிறிதரன், முரசு, மோட்டை, பரந்தன்), 2ம் லெப். அருள்வேலன் (வல்லிபுரம் கைலைநாதன், தென்னைமரவடி, திருமலை) ஆகிய போராளிகள் வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். ரி

# கோதுமை மாவின் விலை கொழும்பில் அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் 90 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இதனால் பாணின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் ஒரு கிலோ கோதுமை மாவின் சில்லறை விலை 8 ரூபா 35 சதமென்றும் மொத்த விலை 7 ரூபா 90 சதமென்றும் உணவு ஆணையாளர் தெரிவித்தார்.

கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் கோதுமை மாவின் மொத்த விலை 7 ரூபா 55 சதமாகும்.

இதன்படி பாணின் விலையும் அதிகரித்துள்ளது. 450 கிராம் பாணின் புதிய விலை 3 ரூபா 80 சதமாகும். கே-மி

தென் கொரியாவில்

# ஆறு இலங்கை வீரர்கள் காணமல் போய்விட்டனர்

(சோல்)

தென் கொரியாவின் தலைநகரான சோலில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்ளது சென்ற இலங்கை அணியின் ஆறு வீரர்கள் திடீரென்று காணமல் போனதினால் அந்த நாட்டுப் பொலிசார் நாடு முழுவதும் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளார்கள்.

தென் கொரியாவில் நடைபெற்ற சர்வதேச கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக 17 பேர் அடங்கிய இலங்கைக்கோஷ்டி தென்கொரியா சென்றது இக்கோஷ்டியில் உள்ள ஆறு வீரர்கள் கடந்த 20ம் திகதி முதல் சோல் நகரிலிருந்து காணமல் போய்விட்டனராம். வி-ரி

# வெகுஜனப் போராட்டம்; அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் மீது குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல் நடத்துவதைக் கண்டித்து நடைபெறவுள்ள வெகுஜன போராட்டம் தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கிடையிலான கூட்டங்கள் கோட்ட மட்டங்களில் கீழ்வரும் ஒழுங்கின்படி நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய் கோட்டத்திற்கு இன்று 26ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், தெல்லிப்பழை, உடுவில் கோட்டத்திற்கு பகல் 11 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், கரவெட்டி கோட்டத்திற்கு பி. ப 2மணிக்கு திரு இருதயக் கல்லூரியிலும், பருத்தித்துறை கோட்டத்திற்கு பி. ப 3மணிக்குவேலாயுதம் ம. வி. யிலும், வேலணை, ஊர்காவற்றுறை கோட்டத்திற்கு மு. ப 11 மணிக்கு சென். ஜோன்ஸ் அக்கடமியிலும்,

நாளை 27ம் திகதி காலை 9 மணிக்கு கோப்பாய் கோட்டத்திற்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், பருதங்கேணி கோட்டத்திற்கு அம்பன் அ. த. க. பாடசாலையிலும், நல்லூர், யாழ்ப்பாண கோட்டத்திற்கு. யாழ். இந்துக் கல்லூரியிலும் சாவகச்சேரி கோட்டத்திற்கு மு. ப 10 மணிக்கு டிறிபேர்க் கல்லூரியிலும், பளை ம. வி. யில் பகல் 12 மணிக்கும் சங்கானை கோட்டத்திற்கு பகல் 11 மணிக்கு வட்டு. இந்துக் கல்லூரியிலும் இக் கூட்டங்கள் நடைபெறும். -நி

# இராசி பலன்

26-09-1995

செவ்வாய்க்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி-9]

துதியை முன்னிரவு 9-07 வரை: சித்திரை பின்னிரவு 3-43 வரை: சித்தயோகம், இராகுகாலம் மாலை3-02முதல் 4-32 வரை, சுபவேளை காலை 10-32 முதல் 12-02 வரை.

மேஷம்: காரிய அனுகூலம், பிரகாசமானபோக்கு பயணம்.

இடபம்: தனஆதயம், புதிய முயற்சி, செல்வாக்கு.

மிதுனம்: வீண் விரோதம், குழப்பமடைதல், காரியத்தடை.

கடகம்: கலகப் போக்கு, தொழில் நஷ்டம் வேதனை.

சிங்கம்; பெருநன்மை. உறவினர் அன்பு, சுப நிகழ்ச்சி.

கன்னி: தொழில் பாதிப்பு, சகோதரர் பகை, பணக்கஷ்டம்.

துலாம்: சமயோசித முடிவு பெண்சகாயம், தியாக உணர்வு.

விருட்சிகம்; அதிகாரிகள் அழுத்தம், கெட்டபெயர், வேலைப்பளு.

தனுசு: எதிரிகள் நன்மை, குடும்பசுபம் தெய்வசிந்தனை.

மகரம்; கலந்துபேசுதல் நற்பணி, புத்திரர் செலவு.

கும்பம்: நிர்ப்பந்தம், உடல் அசதி, குடும்பப்பரிவு.

மீனம்; புதிய நெருக்கடி, பெரியோர்மனஸ்தாபம், கடிதத்தொல்லை.

— ஜோஸ்யர்

## திலீபன் 8ம் ஆண்டு

(1ம் பக்க தொடர்ச்சி)

முன்றலிலும் எழுச்சி பூர்வமாகக் காலை 7-00 மணியில் இருந்து அடையாள உண்ணாவிரதங்களை ஆரம்பித்து, இடையிடையே கலை நிகழ்ச்சிகளும், திலீபன் நினைவு வீடியோப் படக் காட்சிகளும், கவிதை, கட்டுரை வாசித்தலும், நினைவுரைகளும் இடம் பெறும். மாலை 5-00 மணிக்கு இவ்வடையாள உண்ணாவிரதம், நீராகாரம் வழங்கி நிறைவு செய்துவைக்கப்படும்.

இரவு 7-00 மணிக்கு நினைவுப் பொதுக் கூட்டமும் நடைபெறும். இதில் நினைவுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

தியாகி திலீபனின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தின் 11வது நாளான நேற்று. யாழ். குடாநாடு பூராவும் வெகு சிறப்பாக நினைவு தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நல்லூர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில், தியாகியை நினைவு கூரும் அஞ்சலி நிகழ்வுகள், 11வது நாளாகிய நேற்று உணர்வு பூர்வமாக இடம் பெற்றன. பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

இதனைவிடக் குடாநாட்டின் பல பகுதிகளில் சிரமதான நிகழ்வுகளும் பெருமளவில் இடம்பெற்றன. 170-162-நி


# வேரும் விழுதுகளும்

# அறிவித்தல்

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் உணர்வுகள் கலந்த நாளை முன்னிட்டு இன்று கண்காட்சி நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம்; பலரின் வேண்டுகோளுக்கிணங்க 27-ம் திகதி நிறுத்தப் படவிருந்த இக் கண்காட்சி எதிர்வரும் 1-10-95 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகிறோம்.

— செஞ்சோலை மகளிர் வித்தியாலயத்தினர்

**வேரும் விழுதுகளும் அமைப்பாளர்களே!**

எதிர்பார்த்து வந்ததைவிட அதிகமான அறிவைப் பெற்றுள்ளோம். ஆதிகாலமனிதனின் வாழ்க்கை முறையிலிருந்து படிப்படியாக இனறைய மனிதனின் வாழ்க்கை வரை தெளிவாக சித்தரிக்கப் பட்டுள்ளது. மேலைத்தேயத்தவர்களினால் எமது தமிழ் சமுதாயம் எவ்வாறு பாதிப்படைந்தது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. மேல் நாட்டவர் எமது மககளை எவ்வாறு கைக்கூலிகளாக வைத்து தமது கலாசாரம் வாழ்க்கை முறை, கல்வி முறை என்பவறறை திணித்தனர் என்பதும் தெளிவாகக் காட்டப் பட்டுள்ளது. உங்களுக்கு எனது பாராட்டுக்கள்.

க. மதுரநாயகம்,

அதிபர் பளை றோ. க. த. க. பா.

எங்களைத் தேடி விரைந்து செல்வோமா

(ஏ 5333)


தற்சார்பு பொருண்மியம் வளர்ப்போம்
சுதந்திரமாய் வாழ்வோம்

## வடபகுதி முகாம்களிலுள்ள இராணுவம் மீதான தாக்குதலையடுத்து மட்டு. நகரில் படையினர் அட்டகாசம்

(மட்டக்களப்பு)

வட பகுதியில் நடைபெறும் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை அறிந்தவுடன் மட்டக்களப்பில் உள்ள படையினர் அட்டகாசம் புரிகின்றனர்.

ஷெல் வீசுதல், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளல், சுற்றிவளைத்து தேடுதல், கைது செய்தல், தமிழர் சொத்துக்களை நாசமாக்கல் போன்ற அடாவடித்தனங்களில் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்

இதேவேளை மட்டக்களப்பின் தெற்கு எல்லையிலிருந்து வடக்கை நோக்கி ஒருவர் பிரயாணம் செய்தால் வாழைச்சேனைக்கிடையில் குறைந்தது 20 சோதனை நிலையங்களை சந்திக்கவேண்டியுள்ளது.

சோதனைச் சாவடிகளில் மக்கள் பெருமளவு இம்சைப் படுத்தப்படுகின்றனர். பெண்களை தகாத முறையில் கேள்வி கேட்பதும் கேவலமான முறையில் பேசுவதும் வழக்கமாயுள்ளதாம். இதனால் அப்பகுதி மக்கள் எந்நேரமும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருவதாக தெரியவருகின்றது.

வடபகுதி முகாம்களிலுள்ள தமது சகாக்களுக்கு ஏற்படும் இழப்புக்களை அடுத்து மட்டக்களப்பிலுள்ள படையினர் தமிழ் மக்களை தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றனர். ர-ரி

## மிதிவெடியில் சிக்கியவர் வலது காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் உள்ள கைத்தொழில் பேட்டை பகுதிக்கு வீடு பார்க்க சென்ற ஒருவர் மிதி வெடியில் சிக்கி வலது காலை இழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை இடம் பெற்றது. அராலி தெற்கை சேர்ந்த வி. பாலசிங்கம் (வயது 36) என்பவரே மிதிவெடிக்கு இலக்கானவராவார்.

இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (170-ரி)

## தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய் வட்டத்தை சேர்ந்தவர்கள் பின்வரும் கிராம சேவகர்கள் பிரிவுகளில் நாளை 27ம் திகதி தேசிய பாதுகாப்பு நிதியைப் பெற்றுக் கொள்ளுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இவ்விரு வட்டங்களிலும் இதுவரை பங்களிப்பில் கலந்து கொள்ளாதவர்களையும் பங்களிப்பில் கலந்து கொள்ளுமாறு பாசத்துக்குரிய மக்களை கேட்டுக் கொள்கிறோம்.

சங்கானை வட்டம்- சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை மத்தி, சங்கானை மேற்கு 8.30 - 12.00, சிவப்பிரகாச மகா வித்தியாலயம்; சங்கானை கிழக்கு, சங்கானை தெற்கு 1.00- 5.00

சண்டிலிப்பாய் வட்டம்- நவாலி றே. க. த. க. பாடசாலை நவாலி வடக்கு, நவாலி கிழக்கு 8.30 - 12.00 நவாலி றோ. க. த. க. பாடசாலை நவாலி தெற்கு 1.00- 5.00. -ரி

## "தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு இருதரப்பும் மீண்டும் பேசவேண்டும்"

### அமெரிக்க செனட் சபை தீர்மானம்

(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை உருவாக்க இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் என அமெரிக்கா செனட் சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது

இது தொடர்பாக அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கையில்; இது தொடர்பாக நல்லெண்ண முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அமெரிக்க அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது

இதேவேளை உகந்த அரசியல் கட்டமைப்புடன் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்கும் அரசியல் தீர்வே நீடித்து நிற்கும் என்றும் கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா போன்ற முக்கியத்துவமான நாடு சமாதான முயற்சியில் ஈடுபடுவது வரவேற்கத்தக்க ஒரு விடயம் என்றும் கொழும்பு பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன. க-ரி

## பிக்குகள் மாநாட்டில் இனவாதப்பேச்சு

(லண்டன்)

அரசின் தீர்வுத் திட்டத்தை எதிர்த்து கடந்த ஞாயிறு கண்டியில் பௌத்த பிக்குகள் நடத்திய மாநாட்டில் பேசிய அதிகமான பேச்சாளர்கள் காரசாரமாக இனவாதம் பேசியதாக பி. பி. சி. முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்.

பேச்சாளர் ஒருவரை அவர் பேட்டி கண்டபோது;

இலங்கையிலுள்ள சகல சிறுபான்மையினருக்கும் சகல உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு எவருக்கும் எதுவும் வழங்கத் தேவையில்லை.

இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர் முஸ்லிம்களில், தமிழர்களே சகல உரிமைகளையும் பெற்ற பிரசைகளாவர். சிங்களவர்களிலும் பார்க்க கூடிய உரிமைகளை அனுபவிக்கிறார்கள்; அவர்களுக்கு மேற்கொண்டு எதுவும் வழங்கவேண்டிய அவசியம் இல்லை எனக் கூறியதாக பி. பி. சி. முகவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்: தீர்வுத் திட்டத்திற்குப் பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு அரசுக்குப் பெரும் நெருக்குதலைக் கொடுக்கும். இதனால் தீர்வு யோசனையைத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிப்பதும் காலதாமதமாகும் என்றும் தெரிவித்தார். கே-ரி

## ம. எண்ணெய் பரல்களுடன் மாகோ வந்தது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து ஒரு தொகுதி மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றிக்கொண்டு 'மாகோ' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலில் இருந்து மண்ணெண்ணெய் பரல்கள் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது

இக்கப்பலில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு 1000 மெ. தொன் உணவுப்பொருள்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதேவேளை இம்முறை குடும்பம் ஒன்றிற்கு நான்கு லீற்றர் வீதம் பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்று யாழ் அரச அதிபர் க. பொன்னம்பலம் தெரிவித்தார்.

பிரதேச செயலர்கள் இம் மண்ணெண்ணெயை உடனடியாக பெற்று பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (170-சி-ரி)

## தேசிய பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசாமி கோவில் அருகாமையில் நாளை 27ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலில் யா/281 பத்தமேனி, யா/282 கதிரிப்பாய். யா/283 இடைக்காடு யா/284 வளலாய், யா/285 அச்சுவேலி வடக்கு; யா/286 அச்சுவேலி தெற்கு, யா/287 அச்சுவேலி மேற்கு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களில் ஒவ்வொருவர் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். -ரி

## விடுதலைப் புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த வாகனங்களில் பயணம் செய்த படையினர் வாகனங்களிலிருந்து குதித்தவாறு கடும் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கே-ரி

## மர்மச் சடலங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக மேலும் பலர் விரைவில் கைது செய்யப்படலாமென்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வி.ரி

## 250 தபால் பொதிகள் மாகோவில் வந்தது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்திருக்கும் 'மாகோ' கப்பலில் 250 தபால் பொதிகள் வந்து சேர்ந்துள்ளன.

இத்தபால் பொதிகள் யாழ். பிரதம தபாலக ஊழியர்களால் எடுத்துவரப்பட்டு, நாளை புதன்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படும் என்று யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை இக்கப்பலில், கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சீனி, பருப்பு, சவர்க்காரம், புளி போன்ற பொருட்களும் கொண்டு வரப்பட்டுள்ளன. பொருட்களை இறக்கும் பணி உடன் ஆரம்பமானது. 160-162-170-ரி

## 3-வது டெஸ்ட் இலங்கைக்கு வெற்றி வாய்ப்பு

(சியால்கட்)

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையில் பாகிஸ்தானின் சியால்கட்டில் நடைபெறும் இறுதியும் 3 வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கு வெற்றி கிட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்றைய 4ம்நாள் ஆட்டம் முடிவடையும் போது பாகிஸ்தான் 2 வது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பாகிஸ்தான் கப்டன் ரமேஷ்ராஜா 4 ஓட்டங்களுடனும், இன்-சாமான் உல் ஹக் ஓட்டங்கள் ஏதும் எடுக்காது ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆட்டம் தொடங்கிதேனீர் இடை வேளைக்கு முன்பாகவே இலங்கை 2 வது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 338 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. கப்டன் அர்ச்சுன ரணதுங்க மிக வேகமாக 87 ஓட்டங்களைப் பெற்றார். இதில் பத்து பவுண்டறிகள் அடங்கும்.

ஸ்கோர் விபரம்:-

இலங்கை: 232, 338 - 9;

பாகிஸ்தான்: 214. 85 - 6, வி-ரி

## ஷெல்,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்கு அரசஅதிபர் க. பொன்னம்பலம் அவசரச் செய்தி ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

அச்செய்தியில் கடந்த 22ஆம் திகதி விமானப்படையினர் நாகர்கோவில் மகாவித்தியாலயம் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால், அப்பாவி மாணவர்களும், மாணவர்களைக் காப்பாற்ற வந்த பொதுமக்களும் கொல்லப்பட்ட சம்பவத்தைப் பிரதானமாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். 170-ரி

## அக்டோபர் மாதத்திற்கான ஓய்வூதிய வவுச்சர் வந்தது

(யாழ்ப்பாணம்)

'மாகோ'' கப்பலில் ஒக்டோபர் மாதத்திற்கான வவுச்சர்கள் வந்து சேர்ந்துள்ளன.

இம்முறை வவுச்சர்களை தபாலில் அனுப்பி வைப்பதா அல்லது வங்கிகளில் வைத்து உரியவர்களுக்கு வழங்குவதா என்பது பற்றி இன்னமும் முடிவெடுக்கப்படவில்லையாம்.

இதேசமயம் ஒக்டோபர் மாத ஓய்வூதிய வவுச்சர்களை தபால் மூலம் சகலருக்கும் விநியோகம் செல்ல முடியுமா என்பது குறித்து யாழ். அரச அதிபர் செயலக ஓய்வூதிய கணக்காளர் ஊடாக பிராந்திய பிரதி தபால்மா அதிபருடனும் யாழ். பிரதம தபால் அதிபருடனும் அவசர தொடர்பை மேற்கொண்டுள்ளார். 170-162-ரி

## இறக்கக்கண்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமை தமது பூரணகட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த விடுதலைப்புலிகள் ஏ. கே. ரகத்துப்பாக்கி-1, அதற்குரிய ரவைக் கூடுகள் - 2, இராணுவ பூஸ்டர்-1, கோப்பர் சாச்சர்-1, நடுத்தர ரவைகள்-200 கைக்குண்டுகள்-3 உட்பட பல இராணுவ சாதனங்களையும் கைப்பற்றினார்கள்.

மேற்படித் தாக்குதலில் கப்டன் சசிகரன் அல்லது சசி (கிருஷ்ணபிள்ளை தயாபரன்-கிளிநொச்சி) லெப். நந்தகுமார் அல்லது அலன் (சுப்பையா முகுந்தன் கிளிநொச்சி), லெப். கோணேசன் (சக்திவேல்நாதன் முல்லைத்தீவு ஆகிய மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர் வி-ரி

## கண்ணீர் அஞ்சலி

### கணபதிப்பிள்ளை சின்னம்மா

[சிங்கை நகர், புலோலி]

22-09-95 ல் காலமான அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. வீ. ஜி. தங்கவேல் அவர்களின் தாயார் திருமதி கணபதிப்பிள்ளை சின்னம்மா அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

அறவழிப் போராட்டக் குழு

கண்டி- சாலை,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

(ஏ-5334)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.